முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1603

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.02.2024**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
ஞானிகளை உலகமெங்கும் படைக்க வேண்டி
தானதர்மத்தை செய்துகொண்டு
தண்டாயுதன் என் சக்தியாகவே அற்புதம் நிகழ்த்துகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது சால் திங்கள் தன்னில்
சோபகிருது வருடம் மாசி மாதம் 06 ம் நாள், 18.02.2024, ஞாயிற்றுக்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு சக்தியூட்டி
தவபலமாய் ஆறுமுகன் துணைநிற்க
அண்ணல் அரங்கன் இருப்பிடமான
ஓங்காரக் குடில் நோக்கி
4. அகிலத்தார் தொடர்ந்து வந்தால் போதும்
வந்தவர்க்கெல்லாம் ஞான சித்தி
வரமாக வடிவேலன் யான் தந்து
சிந்தை தெளிவூட்டி இந்த கலியுகத்தில்
5. செப்பிடுவேன் அவர்களெல்லாம்
அச்சமற ஞானவான்களாய்
ஞானவான்களாக இந்த புவியில்
ஞான ஆட்சித் தருகின்ற
6. ஞானிகளாகவும் மாற்றம் கண்டு
பேருலகில் ஞானத் தலைமையும்
ஞானிகளெல்லாம் வெளிப்பட இனிதே
ஞான ஆட்சித் தந்து

7. உலக மாற்றம் புரிவர்
நம்பகமுற அரங்கன் வழிவர
ஞானபண்டிதன் என் அருளோடு
இந்த மாற்றம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–